UCAL LIMITED

(Formerly UCAL FUEL SYSTEMS LIMITED)

06th February 2026

National Stock Exchange of India Ltd Exchange Plaza, 5" Floor, Plot No. C/1, G Block, Bandra Kurla Complex, Bandra(E), Mumbai — 400 051 Stock Code : UCAL	BSE Limited Corporate Relationship Department Phiroze Jeejeebhoy Towers, Dalal Street, Mumbai - 400 001 Stock Code: 500464

Dear Sir/Madam,

SUB: Regarding Special Window for Transfer and Dematerialisation of Physical Securities from February 05, 2026 to February 04, 2027.

Pursuant to Securities Exchange Board of India (SEBI) Circular No. HO/38/13/11(2)2026-MIRSD-POD/ I/3750/2026 dated January 30, 2026 under captioned subject matter "**Ease of Doing Investment – Special Window for Transfer and Dematerialisation of Physical Securities**" (hereinafter referred to as *"the Circular"*) SEBI has decided to open another special window for transfer and dematerialisation of physical securities which were sold/ purchased prior to April 01, 2019. This special window shall be open for a period of one year from February 05, 2026 to February 04, 2027.

Please find the Copy of the notice with respect to the Circular as published in Newspapers i.e. Financial Express (English) and Makkal Kural (Tamil) on February 06, 2026.

Kindly take note of the above.
Thanking You,

Yours faithfully
For Ucal Limited

S NARAYAN Digitally signed by S NARAYAN Date: 2026.02.06 17:55:40 +05'30'

S.Narayan
Company Secretary

REGD OFFICE: 11 B/2 (S.P), First Cross Road, Ambattur Industrial Estate,
Ambattur, Chennai - 600 058. Tel.No: 044 - 6654 4719
E-mail: ufsl.ho@ucal.com Website: www.ucalfuel.com
CIN: L31900TN1985PLC012343

சட்டமன்றத் தேர்தலில் கடுமையாக உழைத்து எடப்பாடி பழனிசாமியை மீண்டும் முதலமைச்சர் ஆக்குவோம்

வளர்மதி தலைமையில் நடந்த மகளிரணி கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, பிப்.6

தமிழக சட்டமன்றத் தேர்தலில் கடுமையாக உழைத்து எடப்பாடி பழனிசாமியை மீண்டும் முதலமைச்சர் ஆக்குவோம் என்று அண்ணா தி.மு.க. மகளிரணி, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மகளிரணி மாநில நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு, மகளிரணி செயலாளர் பா.வளர்மதி தலைமை தாங்கினார். அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கோகுல இந்திரா உட்பட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் 8 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் விவரம் வருமாறு:

* தனது ஆட்சிக் காலத்தில், 'உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு, காவல் துறையில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, ஒருங்கிணைந்த மற்றும் பிறப்பிக்கப்பட்டவர்களுக்கு 60 சதவீத இட ஒதுக்கீடு, தொட்டில் குழந்தைகள் திட்டம், சுகவரம் முதல் கல்லறை வரை பாதுகாப்புத் திட்டம், தாலிக்கு தங்கம் திட்டம், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் என பல்வேறு முத்தான மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி சாதனை படைத்தவர்.

அவரின் 78-ஆவது பிறந்த நாளான 24ந் தேதி அன்று, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூராட்சி, கிளை, வார்டு மாநகராட்சிப் பகுதி, வட்ட அளவில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து, ஆங்காங்கே ஏழை, எளியோருக்கு அன்னதானம் வழங்குதல், மகளிர் பயன்பெறும் வகையிலான பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்குதல், ரத்த தானம், நீர் தானம், செய்தல், மருத்துவ முகாம் நடத்துதல், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டிகளை நடத்துதல், மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு கல்வி உபகரணங்களை வழங்குதல், இலவசத் திருமணங்கள் நடத்தி வைத்தல், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களுக்கு அறுசுவை உணவு அளித்தல், பெண்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல் உட்பட மகளிர் மனம் குளிரும் வகையிலான நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிப்பது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

ஜெயலலிதா பிறந்தநாளைக் கோலாகலமாகக் கொண்டாட

* பெண்மையைப் போற்றி வணங்கும், பெண் இனத்தின் உயர்வு இல்லை என்பதை உணர்ந்தவர், பெண்களின் நலனில் அக்கறை கொண்டவர்களுக்கு வணக்கம் செலுத்தியும் ஆண்டுதோறும் மார்ச் 8ம் தேதி நாம் 'சர்வதேச மகளிர் தினமாக' கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மகளிர் அணியின் சார்பில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கழக அமைப்பு ரீதியாக செயல்பட்டு வரும் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி, பெண்களுக்கு பெருமை சேர்த்திடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி சிறப்பிப்பது என இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

* கடந்த 56 மாத கால விடியா தி.மு.க. ஆட்சியில் சட்டத்தை காக்கக்கூடிய காவலர்களின் கையாலாகாத தனமும், சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரின் கைகளே ஓங்கி இருக்கின்றன என்பது பல்வேறு கொடூரச் சம்பவங்கள் மூலம் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. தமிழ்நாட்டில் கொலை, கொள்ளை, வழிப்பறி, பாலியல் பலாத்காரம், கள்ளச் சாராய மரணங்கள், கஞ்சா, மெத்தப்பெட்டமைன் போன்ற போதைப் பொருட்கள் தாராளமாக கிடைப்பது, கோவையில் கல்லூரி மாணவி பாலியல் வன்கொடுமை, காவல் நிலைய மரணங்கள், நடைபாதையில் கொலை, வெட்டிப் படுகொலைகள், தனியாக வசிக்கும் முதியோர்களைக் குறிவைத்து நடக்கும் ஆதாயக் கொலைகள் ஆகிய சம்பவங்கள் அன்றாட நிகழ்வுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு விடியா தி.மு.க. அரசுக்கு இக்கூட்டம் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

விண்ணை முட்டும் விலைவாசி உயர்வுக்கு கண்டனம்

* எதிர்க்கட்சியாக இருந்தபோது, 'தங்கள் ஆட்சிக்கு வந்தால் சொத்து வரியை உயர்த்த மாட்டோம்' என்று உறுதிமொழி... ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் பலமடங்கு சொத்து வரியை உயர்த்தி மக்கள் தலையில் சுமத்தியது. மின்கட்டணத்தை மூன்று முறை உயர்த்தியதோடு, மாதாந்திர மின் கட்டணக் கணக்கெடுப்பு முறையை அமல்படுத்துவதாகக் கூறி மறுத்து வருகிறது.

'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல, கடுமையான விலைவாசி உயர்வு விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், கட்டுமான பொருட்களின் விலையேற்றம் பன்மடங்கு உயர்ந்து, மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது.

தமிழ் நாட்டில் நிலவி வரும் மேற்கண்ட அசாதாரண சூழலுக்குக் காரணமான விடியா தி.மு.க. அரசின் நிர்வாகத் திறனற்ற முதலமைச்சர் ஸ்டாலினுக்கு, கழக மகளிர் அணி தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

* 2026ல் நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, ஒரு பூத்துக்கு 78 பேர் கொண்ட மகளிர் குழுக்களை அமைத்து, ஆங்காங்கே வாழும் மக்களிடையே வீடு வீடாகச் சென்று, எடப்பாடியின் முத்தான தேர்தல் வாக்குறுதிகளை துண்டுப் பிரசுரங்கள் மற்றும் இல்லங்கள் பிரச்சாரங்கள் மூலமாக, மகளிர் உள்ளிட்ட பொதுமக்களிடையே தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவதற்கு அயராது, கண் துஞ்சாது களப் பணி ஆற்றிட இக்கூட்டம் உறுதி ஏற்கிறது.

நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத் தேர்தலையொட்டி, கழகப் பொதுச் செயலாளர் புரட்சித் தமிழர் எடப்பாடி, இரண்டு கட்டங்களாக தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டுள்ளார்.

மகளிர் நலன் காக்கும் வகையில், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும், ஒவ்வொரு மாதமும் உரிமைத் தொகையாக ரூ. 2,000 குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் ஆண்களுக்கும் கட்டணமில்லா பேருந்து பயணம், 'அம்மா இல்லம் திட்டம்' மூலம் அனைவருக்கும் வீடு வழங்கப்படும், 150 நாட்கள் வேலை வாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும் உள்ளிட்ட எடப்பாடியாரின் தேர்தல் வாக்குறுதிகளை மக்களிடம் கொண்டு சேர்த்து விடிப்புணர்வை ஏற்படுத்தி, மகளிர் வாக்குகளைப் பெற்று, விடியா தி.மு.க. ஆட்சியை வீழ்த்தி, வீட்டுக்கு அனுப்பி, 2026ல் எடப்பாடியாரை முதலமைச்சர் அரியணையில் அமர வைப்பதற்கு சூளுரைப்போம் என சபதம் ஏற்போம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜோஹோ இணைநிறுவனர் ஸ்ரீதர் வேம்பு விவாகரத்து: மனைவி பிரமிளா சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு

சென்னை, பிப்.6

ஜோஹோ இணை நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு தனது மனைவியை விவாகரத்து செய்வது தொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மனைவி பிரமிளா, சென்னை உயர்நீதிமன்றத்தில், ஆதாரங்களைச் சேகரிக்க ஆணையர் நியமனம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார்.

பிரபல ஐடி நிறுவனமான ஜோஹோவின் இணை நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு மற்றும் அவரது மனைவி பிரமிளா சீனிவாசன் கடந்த 1993 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஆட்டிசம் பாதிப்புடைய மகன் ஒருவர் உள்ளார். கடந்த சில ஆண்டுகளாக இருவரும் பிரிந்து வாழ்ந்து வரும் நிலையில், அமெரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றத்தில் இவர்களின் விவாகரத்து வழக்கு நடைபெற்று வருகிறது. 2019 ஆம் ஆண்டு ஸ்ரீதர் வேம்பு இந்தியா திரும்பிய நிலையில், 2021 ஆம் ஆண்டு அவர் விவாகரத்து கோரி வழக்கு தொடர்ந்தார்.

கலிபோர்னியா நீதிமன்றம் உத்தரவு:

இந்த விவாகரத்து வழக்கில், ஸ்ரீதர் வேம்பு தனது பெயரில் இருந்த ஜோஹோ நிறுவனப் பங்குகள் மற்றும் சொத்துகளைத் தனது சகோதரி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களின் பெயருக்கு சட்டவிரோதமாக மாற்றியதாக பிரமிளா சீனிவாசன் குற்றம் சாட்டினார். விவாகரத்து தீர்வின் போது சொத்தில் சரிபாதி கிடைப்பதைத் தடுப்பதற்காகவே அவர் இவ்வாறு செய்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இதனை ஸ்ரீதர் வேம்பு மறுத்த போதிலும், கலிபோர்னியா நீதிமன்றம் பிரமிளாவின் உரிமையைப் பாதுகாக்க சுமார் 15,288 கோடி ரூபாய் (1.7 பில்லியன் டாலர்) மதிப்பிலான பிணைத்தொகையை வழங்க ஸ்ரீதர் வேம்புவுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள சாட்சிகளிடம் இருந்து இந்த வழக்கு தொடர்பான ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களைச் சேகரிக்க ஒரு தனி ஆணையரை நியமிக்கக் கோரி, பிரமிளா சீனிவாசன் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. கலிபோர்னியா நீதிமன்றம் அனுப்பிய கோரிக்கை கடிதத்தின் (Letter of Rogatory) அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரமிளா தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் விளக்கமளித்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி. தனபால், இது தொடர்பாக ஸ்ரீதர் வேம்பு மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களான ராதா, சேகர், குமார் உள்ளிட்ட 10 பேருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த மனு குறித்து பிப்ரவரி 25 ஆம் தேதிக்குள் சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டு நீதிமன்றங்களின் கோரிக்கையின் அடிப்படையில் சாட்சிகளை விசாரிக்க உயர்நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் சிவில் நடைமுறை சட்டப்பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. நியமிக்கப்படும் ஆணையர் தமிழ்நாட்டில் உள்ள சாட்சிகளிடம் விசாரணை நடத்தி, திரட்டப்படும் ஆவணங்களை அமெரிக்க நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

பஞ்சாபில் 'ஆம் ஆத்மி' நிர்வாகி சுட்டுக் கொலை

ஜலந்தர், பிப். 6–

பஞ்சாபில் 'ஆம் ஆத்மி' கட்சியின் நிர்வாகி லக்கி ஓபராய் இன்று (வெள்ளிக்கிழமை) காலை சுட்டுக் கொல்லப்பட்டார். ஜலந்தரில் உள்ள குருத்வாராவில் இருந்து காலை 7.50 மணியளவில் வெளியே வந்த அவர், தன் காரில் ஏறியுள்ளார்.

அப்போது இரண்டு ஸ்கூட்டர்களில் வந்த மர்ம நபர்கள் காருக்குள் இருந்த லக்கி ஓபராயை துப்பாக்கியால் சரமாரியாக சுட்டுள்ளனர். 5 முதல் 10 முறை அவரை நோக்கிச் சுட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் மருத்துவமனைக்கு அவசர அவசரமாக அழைத்துச் செல்லப்பட்ட அவர், அங்கு உயிரிழந்து விட்டதாக ஜலந்தர் காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.



இன்று சென்னை மாவட்ட அரிமா சங்கம் 3241F ஆளுநர் எம்.பிரவினலாவின் பிறந்தநாளை முன்னிட்டு மேற்கு மாம்பலம் காக்கும் கரங்கள் முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. முன்னாள் மாவட்ட ஆளுநர் மற்றும் ஆலோசகர மணிவால்,விஜய ஆனந்த்,உதயம் பாலகிருஷ்ணன், ராஜேஷ்வர ராவ், உதயகுமார், ஈகை சிவகுமார், விவேக், ராஜாராம் ஆகியோர் கலந்து கொண்டனர்

மத்திய பட்ஜெட்டை விமர்சித்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் கிழிப்பு: கோவையில் 23 பா.ஜ.க.வினர் கைது

கோவை, பிப். 6–

கோவையில் மத்திய அரசின் பட்ஜெட்டை விமர்சித்து ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை கிழித்ததாக பா.ஜ.க.வைச் சேர்ந்த 23 பேரை போலீஸார் கைது செய்தனர்.

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு வழங்கவில்லை எனக் கூறி, கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளில் தி.மு.க. சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதில் பாஜக அரசு தமிழகத்துக்கு ஒதுக்கிய நிதி பூஜ்யம் என்றும், 'பட்ஜெட் 2026 ஒரு பூஜ்யம்' என்ற வாசகங்களும் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக சிங்காநல்லூர், கணபதி பகுதிகளில் அதிக அளவில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. இதையறிந்த பா.ஜ.க. இளைஞரணியைச் சேர்ந்த சிலர், மத்திய பா.ஜ.க. அரசை விமர்சிக்கும் வகையில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளைக் கிழித்துள்ளனர். இதுகுறித்த தகவலின் பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்த போலீஸார் சுவரொட்டிகளைக் கிழித்த பா.ஜ.க.வினரைக் கைது செய்தனர்.

சிங்காநல்லூர் காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 14 பேர், சரவணம்பட்டி காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் 9 பேர் என 23 பேர் கைது செய்யப்பட்டனர்.